மாணிக்கக்கல் ஆபரண
ஆராய்ச்சி பயிற்றுவிப்பு
நிலையம்

ஹிதெல்லன, இரத்தினபுரி.

# ஆண்டறிக்கை

# 2011



GJRTI

மாணிக்கக்கல் ஆபரண
ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்
ஹிடெல்லன,
இரத்தினபுரி.
2012.08.29

கௌரவ சுற்றாடல் அமைச்சர்,
கூற்றாடல் அமைச்சு,
சம்பத் பாயா,
இல. 82
றஜமல்வத்தை வீதி,
பத்ரமுல்ல

கௌவர அமைச்சருக்கு,

ஆண்டறிக்கை – 2011

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் பின்வரும் பதிவேடுகளை நான் உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

1. 2011 ஆம் ஆண்டிற்கான மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்தின் நிர்வாக அறிக்கை.

2. 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் வருமான, செலவினக் கூற்று 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சற் கூற்று.

3. 2011 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தங்கள் விசுவாசமுள்ள

..........................
பைசால் றஸீன்
தலைவர்
மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்

**தொலை நோக்கு**

" மாணிக்கக்கல் மற்றும் ஆபரணத் தொழிலின் வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் உரிய ஆராய்ச்சியையும் பயிற்றுவிப்பையும் மேற்கொண்டு வலயத்தின் அதிசிறந்த ஆராய்ச்சிப் பயிற்றுவிப்பு நிறுவகமாதலாகும்."




**குறிக்கோள்**

"மாணிக்கக்கல் மற்றும் ஆபரணத் தொழிலின் மிகக் கூடிய போட்டித் திறனை மேம்படுத்துவதன் மூலம் எமது சேவையாற்றுபவர்களுக்கு உச்ச அளவில் சேவையாற்றுவதற்கு உரிய புதிய மாணிக்கக்கல் படிமங்களை கண்டுபிடிப்பதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகள், மாணிக்கக்கல் மற்றும் ஆபரணத் தொழிலின் அபிவிருத்திக்கு உரித்தான புதிய படைப்புகளை உருவாக்கி அவற்றின் பெறுமதியை அதிகரிப்பதற்குரிய பணி மற்றும் தொழிநுட்பத் திறமையையும் திறன்வாய்ந்த முழுமையான ஊழியப்படையினை உருவாக்கி தொழிலுக்கு உரிய செயலமர்வுகள், சஞ்சிகைகள் புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதே எமது குறிக்கோளாகும்.

2. பணிப்பாளர்கள் சபையின் கூட்டமைப்பு

2.1 2011 ஆம் ஆண்டின் போது நிலையத்தின் பணிப்பாளர்கள் சபைக் அங்கத்தவர்களின் கூட்டமைப்பு பின்வருமாறாகும்.

| | | |
|---|---|---|
| 1. | சனாப் பைஸால் றஸீன் (தலைவர்) | 2008.07.15 ஆம் திகதி முதல் பணிப்பாளர் சபைத் தலைவர் |
| 2. | திரு.இந்திரஜித் அபொன்ஸு | 2010.05.14 ஆம் திகதி முதல் இன்று வரை பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 3. | பேராசிரியர் என்ஜீ.விஜயானந்த அவர்கள் | 2008.04.23 ஆம் திகதி முதல் இன்றுவரை பணிப்பாளர் சபை உறுப்பினர் (தலைவர் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்) |
| 4. | திருமதி.கயனி கௌசல்யா விஜேசிங்ஹ | 2011.03.23 ஆம் திகதி முதல் 2011.08.08 வரை பணிப்பாளர் சபை உறுப்பினர் : திறைசேரிப் பிரதிநிதி |
| 5. | திருமதி.ஏ.டீ.ஏ.கே. நன்தசேன | 2011.09.29 ஆம் திகதி முதல் இன்று வரை பணிப்பாளர் சபை உறுப்பினர் : திறைசேரிப் பிரதிநிதி |

2.2 சிரேஷ்ட முகாமைத்துவம

திலக் தர்மரத்ன நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம்
(B.Sc, M.Sc in Gemmology (SL), M.Sc.(UK) (2000.08.01 - இன்று வரை)

3. மீளாய்வு ஆண்டின் சந்தரப்பங்கள் மற்றும் சவால்கள் தொடர்பான தலைவரின் மீளாய்வு

3.1 சந்தர்ப்பங்கள்

ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பிற்கான கேள்வியில் அதிகரிப்பு

நிறுவகத்தின் சேவைகளுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கேள்விகள் அதிகரித்து வருகின்றன. இத் துறையில் பயிற்றுவிப்பாளர்களுக்காக சிறந்த கேள்வி நிலவியமை இக் கேள்வி அதிகரிக்கப்படுவதற்கான காரணகியிருந்தன. மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்தின் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மூலமும் அச் சேவைகளுக்கான கோரல்கள் அதிகரிக்கப்படுவதற்குக் காரணமாகியிருந்தன. இத் துறைக்கு உரித்தான முழுமையான அளவில் பயிற்சிச் சேவைகளை வழங்கும் வேறு நிறுவகங்கள் எதுவும் கிடையாது. இவ்வாறே இத் துறைக்கு அவசியமான ஆராய்ச்சித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து கொண்ட சேவை வழங்குனரும் வலயத்தில் இல்லை. இவ்வாறே தற்போதைக்கு விரைவான முன்னேற்றத்தைக் கைக்கொண்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பயிற்சி சந்தை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன.

நிறைவு செய்யப்படாத தேவைகள் -

துறைக்காக சேவை வழங்குனர்களால் பூர்த்தி செய்யப்படாத தேவைப்பாடுகள் மேலும் உள்ளன. இதன் கீழ் முறையான இரத்தினக்கல் படிமத்தின் ஆய்வு, மூலப் படிமங்களை இனங்காணல், மூலப் படிமங்களைப் பெற்றுக்கொள்ளும் தொழில்நுட்பத்தைத் திட்டமிடல் மற்றும் கணனி சார் ஆபரண வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான பயிற்சிகளை வழங்குவதும் உள்ளடங்கும்.

தொழில்நுட்ப முன்னேற்றங்கள்

இரத்தினக்கல் படிம அகழ்வும் மற்றும் இரத்தினக்கற்களின் வர்ணத்தை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக புதிய இயந்திரத் தொகுதியை கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பொன்று உள்ளது.

நிறுவகத்தின் வளர்ச்சி

உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்குச் சேவைகளை வழங்கக்கூடியதாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் இரத்தினக்கல், ஆபரண பல்கலைக்கழகத் தரத்திற்கு இந் நிறுவகத்தை தரமுயர்த்துவதற்கான தேவைப்பாடு உள்ளது.

ஏனைய வசதிகள்

கெவுடா வெப்ப மூட்டுவதற்கான நிலையங்களை இலங்கையில் வேறு பாகங்களில் ஸ்தாபிப்பதற்கும் ஆராய்ச்சி வசதிகளின் மூலம் இத் துறைக்காக பாரியளவு சேவைகளை வழங்கும் ஈடுஇணையற்ற நிறுவகமாக திகழ்கின்றது.

தொழில் மேம்பாட்டிற்கான கூட்டுத் திட்டங்கள்

இரத்தினக்கல் தொழிற்துறைக்காக சுற்றாடல் சார்ந்த முறைகளை அறிமுகப்படுத்துவதன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் ஆராய்ச்சிச் செயற்திட்டத்துடனும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காகவும் உரித்தான வேறு அரச நிறுவகங்களுடனும் கூட்டுச்சேர்ந்து செயற்படும் சந்தர்ப்பம் இந் நிறுவகத்தில் உள்ளது.

பிரசார நிகழ்ச்சித்திட்டங்கள்

நிறுவகத்தின் சேவைகள் தொடர்பாக பொது மக்களுக்கிடையே பிரசாரம் செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த வேண்டி உள்ளது. இதற்காக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், இரத்தினக்கல், ஆபரண சஞ்சிகைகள் மற்றும் செய்திக் குறிப்புகள், கட்புல செவிப்புல சமர்ப்பணங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்திக்கொள்ள முடியும்.

3.2 சவால்கள்

------------------

உட்கட்டமைப்பு வசதிகள்

பயிற்சிப் பிரிவுகளில் போதியளவு நவீன வசதிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் அபிவிருத்தி அடையவில்லை. இத்தகைய உபகரணங்கள் இப் பயிற்சிப் பிரிவுகளுக்கு அறிமுகப்படுத்தி இதன் மூலம் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு அவசியமான பயிற்சி, அறிவு மற்றும் திறன்களை வழங்குவதற்கு உடனடிநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆபரண பயிற்சிப் பிரிவு, இரத்தினக்கல் பட்டை தீட்டற் பிரிவு மற்றும் இரத்தினக்கல் ஆய்வுகூடத்திற்காக மிக நவீன இயந்திர உபகரணங்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. மேலும் உலோகத் தரத்தை நிச்சயிக்கும் அலகை ஆரம்பித்து இதனை ஒத்த பாடநெறிகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. வைரத்தைப் பட்டை தீட்டுவது இத் துறையின் சிறப்பான துறையென்பதால் இதற்காக உரிய பயிற்சிப் பிரிவை ஸ்தாபித்து அறிவை வழங்குவதும் இதனை ஒத்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் மின்னடுப்புகளைப் பயன்படுத்தி இரத்தினக்கற்களின் வர்ணங்களை

மேம்படுத்தும் புதிய செயன்முறைகளை அறிமுகப்படுத்தும் இயலுமை இந் நிறுவகத்தில் நிலவிய போதிலும் இத் தொழிநுட்ப உபகரணப் பற்றாக்குறை இதற்காகத் தாக்கமளித்திருந்தது.

பௌதீக வளங்கள்

நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவின் நிகழ்ச்சிகள் பிரபல்யமான நிலையில் மேற்கொள்வதற்காக வாகனங்கள், உபகரணங்களின் பற்றாக்குறை நிலவுகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

ஊழியர்களின் நலிவான சிந்தனை

அண்மைக்காலத்தில் ஊழியர்களிடையே பாதகமான சிந்தனையுடனான மனோதத்துவப் பின்னணியில் உள்ளமை.

சகோதர நிறுவகத்தின் மூலம் எமது சேவைகளை மேற்கொள்ளல்

உதாரணம் :- எமது பயிற்சி. ஆய்வுகூட சேவைகள் ஆகியன.

மனித வளங்கள்

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 30 இன் படி தயாரிக்கப்பட்ட நிறுவகத்தின் புதிய ஊழியர் திட்டம், ஆட்சேர்ப்பு நடைமுறைகள், பதவி உயர்வு நடைமுறைகள் என்பவற்றிற்காக 2011 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்கள அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், நிறுவக நடவடிக்கைகள் தடையின்றி நடாத்தப்படுவதற்காக அத்தியாவசியமான ஆகக் குறைந்த பதவியணி ஆட்சேர்ப்பிற்காக அவசியமான ஏற்பாடு திறைசேரியால் வழங்கப்படாமையால் ஆட்சேர்க்கப்பட முடியாதிருந்தது. இது நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தடையாக இருந்தது.

நிறுவகத்தின் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி உத்தியோகத்தர்களுக்காக உள்நாட்டில் உள்ள பயிற்சிச் சந்தர்ப்பங்கள் குறைவானமையாலும் உள்ள உத்தியோகத்தர்கள் குறைவானமையாலும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதற்காக உள்ள சந்தர்ப்பங்கள் குறைவானமையாலும் அப் பதவியணியை தற்போதைய துறையின் கேள்விக்கு நிகரான வகையில் ஏற்பாடு செய்ய முடியாதிருந்தது. இது துறையின் எதிர்காலத்திற்கு பாதகமான வகையில் தாக்கமளிப்பதுடன் நிறுவகத்தின் பயிற்சி வீழ்ச்சியடைவதற்கு தாக்கமளிக்கக் கூடியதாகும். நிறுவகப் பதவியணிக்காக வெளிநாட்டுப் பயிற்சி சந்தர்ப்பங்கள்

இன்மையும் இந் நிலையை மேலும் பாதித்தது.

இந் நிலை அமைச்சின் மூலம் திறைசேரிக்கு தொடர்ந்து அறிவிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுகளின் போது போதிய ஏற்பாடுகள் பெறப்பட்டு அவசியமான பதவியணியை ஆட்சேர்ப்பதற்கும் தற்போதுள்ள பதவியணி உரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக தொடர்புபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி வளங்கள்

நடைமுறைச் சந்தர்ப்பத்தின் படி, நிறுவக நடவடிக்கைகள் விரிவடையும் மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு போதிய நிதி பங்களிப்பு திறைசேரியின் மூலம் கிடைக்கப்பெறவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உட்பட்ட நிறுவகத்தின் முக்கிய பணிகளைச் செயற்படுத்துவதற்கு அவசியமான பதவியணியை ஆட்சேர்ப்பதற்காக நிதி ஏற்பாடு திறைசேரியால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

தனியார் துறையில் பயிற்சி நிறுவகங்களை உருவாக்குதல்

மாணிக்கக்கல் மற்றும் ஆபரணத் தொழிலின் கல்வி நடவடிக்கைகளுக்காக தனியார் துறையின் பங்கேற்பு படிப்படியாக அதிகரித்துள்ளது.

தொழிற்துறையின் சில பகுதிகளில் ஊக்குவிப்பு இன்மை
எடுத்துக்காட்டாக சேவை வழங்கல் பிரிவு

புவியியலாளர்களினதும் பயிற்சியாளர்களினதும் பற்றாக்குறை

ஆராய்ச்சி மற்றும் பயிற்சியாளர்களுக்கு உயர் பயிற்சி நடவடிக்கைகளுக்காக சந்தர்ப்பங்கள் இன்மை மற்றும் பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மற்றும் ஏனைய துணைப் பதவியணியினருக்கு இடையே ஊழியர் இடைவெளி காணப்பட்டது.

4. பணிப்பாளரின் அறிக்கை

4.1 நோக்கம்

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய மாணிக்கக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் 1995 யூலை 28 ஆம் திகதிய 882 ஆம் இலக்க வர்த்தகமானி அறிவிப்பின் மூலம் மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. நிறுவகத்தின் பிரதான

நோக்கமாக ஆராய்ச்சி, பயிற்சி வசதிகளினூடாக இரத்தினக்கல் ஆபரணத் தொழிற்துறையை சீராக்கி, மேம்படுத்தலும் விருத்திசெய்தலும்.

4.2 நிலையத்தின் அதிகாரங்கள்

1995 ஆம் ஆண்டின் யூலை 28 ஆந் திகதிய 882 ஆம் இலக்க வர்த்கமானி அறிவித்தலின் படி நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் பின்வருமாறாகும்.

(i) இலங்கையில் இரத்தினக்கல் கனிப்பொருட்கள் பற்றியும் இரத்தினக்கல் படிமங்கள் பற்றியும் ஆய்வுகளை மேற்கொள்வதும் இவற்றிற்கு உரித்தான பின்வரும் விடயங்கள் தொடர்பில் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சிகளை நடாத்துதலும்.

i. அவற்றின் அமைவிடம்
ii. அவற்றை இனங்காணுதல்
iii. இரத்தினக்கற்களின் பெறுமதியை அதிகாரிப்பதற்கான வழிமுறைகள்
iv. நிலையம் தொடர்பான வேறு துறைகளின் நடவடிக்கைகள்

(ii) அகழ்விடங்களை வெட்டுதல், இரத்தினக்கற்களை பட்டைதீட்டுதல், ஆபரண உற்பத்தி மற்றும் இரத்தினக்கற்களை மெருகூட்டல் முறைகள் போன்ற பிரிவுகளுக்கு உரித்தான இரத்தினக்கல், ஆபரணத் தொழிலின் அபிவிருத்திக்காக இயந்திரத் தொகுதியை உற்பத்தி செய்தல் உட்பட தொழிநுட்ப மற்றும் ஏனைய ஆலோசனைகளை வழங்குதல்.

(iii)பின்வரும் பயிற்சிகளை வழங்குதல்:-

i. இரத்தினக் கற்களை பட்டைதீட்டல்
ii. ஆபரணம் உற்பத்தி செய்தல்
iii. வைரம் உட்பட இரத்தினக் கல்லியல்
iv. ஆபரண வடிவமைப்பு
v. இரத்தினக் கற்களை மெருகூட்டல் கெவுடா வெப்பமூட்டுதல் உள்ளடங்கலாக
vi. இரத்தின்ககல் மற்றும் ஆபரணத் தொழிலுடன் தொடர்பான ஏனைய பிரிவுகள்

4.3 செயற்பாடுகளும் திறன்களும்

4.3.1 பயிற்றுவிப்புப் பாடநெறிகளை நாட்டில் பரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் இளைஞர், யுவதிகளுக்காக இரத்தினக் கல்லியல் பயிற்றுவிப்பு பாடநெறிகளை கொழுமபு மற்றும் இரத்தினபுரி நிலையங்களில் தொடர்ந்து நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

## 4.4 கல்விப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகள்

### 4.4.1 பயிற்றுவிப்புப் பிரிவின் 2011 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம்

கடந்த ஆண்டின் போது நிறுவகத்தின் மூலம் தொழிலிற்கான கேள்வியுடன் பல பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் உள்ளபடியாக தொழிலில் ஈடுபடும் பயிலுனர்கள் பலருக்கு உயர் தொழிநுட்ப மற்றும் தொழிற்திறன் அறிவை வழங்கும் தேவைப்பாடு உருவானது. முழுமையான திறன் கொண்ட இக்குழு நிறுவகத்தின் மூலம் பெற்றுக்கொண்ட கல்விசார் சூழலில் உள்நாட்டு இரத்தினக்கல், ஆபரண கைத்தொழிலை மிகவும் போட்டித் தன்மையுடன் கொண்டு நடாத்துவதற்கு இயலுமாக உள்ளது.

1. 2011 ஆம் ஆண்டின் போது 06 பயிற்சி நிலையங்களில் பாடநெறிகள் நடாத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் பிரகாரம் இரத்தினபுரி, கொழும்பு, கண்டி, காலி, ஹம்பாந்தோட்டைஈ புத்தளை போன்ற நிலையங்களில் மிகவும் திறமையுடன் தொழிற்துறையில் பயிற்சிக் கோரல்களை பிராந்திய ரீதியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தன.

2. குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களில் திறன்வாய்ந்த இளைஞர் யுவதிகளை இத் துறையில் ஈடுபடுத்தி அவர்களை சுயதொழில் துறையில் ஈடுபடுத்துவதற்காக மத்திய மாகாண சபை, தேசிய இளைஞர் படையணி, கனடா உலக பல்கலைக்கழக சேவை WUSC போன்ற வெளி நிறுவகங்களின் அனுசரணையைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

3. 2011 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கண்காட்சிக்கு இணையாக புத்தள இரத்தினக்கல் பட்டை தீட்டல் மற்றும் ஆபரண உற்பத்தி பயிற்சிப் பிரிவு கனடா உலக பல்கலைக்கழக சேவை WUSC அனுசரணையுடன் இவ்வாண்டின் போது ஆரம்பமானது. இதன் மூலம் இப் பிரதேசத்தில் தொழிற்துறைக்கு நவீன தொழிநுட்ப அறிவை வழங்கும் தேவைப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.

4. ஆபரண உற்பத்திப் பாடநெறி NVQ - 4 மற்றும் ஆபரணக் கல் பதிப்பு பாடநெறி NVQ -3 மட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

5. வடிவமைக்கப்பட்ட ஆபரணங்களுக்காக உள்நாட்டு சந்தை நாளுக்கு நாள் விரிவடைவதை இனங்கண்டு கொள்ள முடியும். இதன் பிரகாரம் வடிவமைக்கப்பட்ட ஆபரண உற்பத்திப் பிரிவு உள்நாட்டில் ஸ்தாபிக்கப்படுவதற்கு அறிவு, தொழிநுட்பம் மற்றும் திறனை வழங்குவதற்காக அப் பயிற்சிப் பாடநெறியை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. 2011 ஆம் ஆண்டின் போது பிரதான செயலமர்வுகள்/ 8 கண்காட்சிகளுக்காக நிறுவகம் நேரடியாக பங்களிப்புச் செய்தது. இதன் பிரகாரம் புதிய ஆக்கபூர்வமான பயிற்சி பெறுனர்கள் துறைக்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கும் தொழிற்துறையை விரித்தி செய்து, தொழிநுட்பம் மற்றும் அறிவை வழங்குவதற்கும் முடிந்தது.

7. பயிற்சிப் பிரிவுகளுக்காக புதிய தொழிநுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கு அடிப்படை நடவடிக்கைகள் பல நடாத்தப்பட்டன. இதன் பிரகாரம் அத் தொழிநுட்பப் பயன்பாடுகள் 2012 ஆம் ஆண்டின் போது பயிற்சிப் பிரிவிற்காக அறிமுகப்படுத்துவதற்கு முடிந்தது.

8. 2011 ஆம் ஆண்டின் போதான மாணவர் பதிவும் பாடநெறியைப் பூர்த்தி செய்தோரும்

| பாட நெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| இரத்தினக்கல்லியல் | 36 |
| கெவுடா வெப்பமூட்டல் | 38 |
| இரத்தினக்கல் பட்டைதீட்டல், மெருகூட்டுதல் | 108 |
| இரத்தினக்கல் வர்ண தரம்பிரித்தல், சந்தைப்படுத்தல் | 57 |
| ஆபரண வடிவமைப்பு | 31 |
| ஆபரண உற்பத்தி | 58 |
| ஆபரணங்களுக்காக கற்கள் பதித்தல் | - |
| மொத்தம் | **328** |

2011 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்ட பாடநெறிகளின் தகவல்கள் பின்வருமாறாகும். இப் பூர்த்தி செய்யப்பட்ட பாடநெறிகளில் சில 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டவையாகும்.

| பாட நெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| இரத்தினக்கல்லியல் | 13 |
| கெவுடா வெப்பமூட்டல் | 25 |
| இரத்தினக்கல் பட்டைதீட்டல், மெருகூட்டுதல் | 43 |
| இரத்தினக்கல் வர்ண தரம்பிரித்தல், சந்தைப்படுத்தல் | 72 |
| ஆபரண வடிவமைப்பு | 30 |
| ஆபரண உற்பத்தி | 21 |
| ஆபரணங்களுக்காக கற்கள் பதித்தல் | 8 |
| மொத்தம் | **212** |

இவ்வாண்டின் போது 2011 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பின்வரும் நடவடிக்கைகளுக்கு அவசியமான அடிப்படைச் செயற்பாடுகள் பல மிகையாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அவையாவன பாடநெறிகளை நவீனமயமாக்கி புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தல், உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தக் கூடிய மற்றும் புதிய படைப்புகளை மேற்கொள்வோருக்கு அவசியமான பாடநெறிகளை அறிமுகப்படுத்தி பாடநெறிகளை மீட்கும் நடவடிக்கைகள் இவற்றில் முக்கியமானவையாகும்.

## 4.5 மனிதவள அபிவிருத்தி

| | பெயர் | பாடநெறி | செயலமர்வு | நிறுவகம் |
|---|---|---|---|---|
| 01 | திரு. நலின் ஜயசிங்ஹ | - | Human Talent Management | இலங்கை மன்றக் கல்லூரி |
| 02 | திரு. கமல் பட்டகொட<br>திரு. அனுர சமரவீர | | | - |
| 03 | திரு. வசந்த கம்லத்<br>திரு. நலின் ஜயசிங்ஹ | - | Build A WIning Organization | Skill Development Fund Limited |
| 04 | திருமதி. சாமிக்கா விக்ரமாரச்சி | - | Supervisor Management | Skill Development Fund Limited |
| 05 | திரு. அனுர சமரவீர<br>திருமதி கே. ஜீ. சுனித்தா | - | அபிவிருத்தி வடிவமைப்பு தயாரிப்பாளர்களின் பயிற்சி<br>நிகழ்ச்சித் திட்டம் | ஏற்றுமதி அபிவிருத்தி சபை |
| 06 | திரு. கே.வீ.கே. குமார | நவீன விஞ்ஞான ரீதியான வாகனப் பயன்பாடு | - | நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிருவகம் |
| 07 | இரத்தினபுரி தலைமைக் காரியாலயத்தின் சகல உத்தியோகத்தர்களும் | தமிழ் மொழி வகுப்புக்கள் நடாத்தல் | - | இரத்தினபுரி தலைமைக் காரியாலயம் |
| 08 | திரு. புத்திக குணரத்ன | Computer Training Certificate in Multimedia Package | - | IDM Affiliated Campus |
| 09 | திருமதி. கேட் லியனாரச்சி<br>திரு. அனுர சமரவீர<br>திரு. கமல் பட்டகொட<br>செல்வி. ருஸெய்னா | தொழிற்துறைக்கான ஆங்கிலச் சான்றிதழ் பாடநெறி | - | இலங்கை அபிவிருத்தி மற்றும் நிர்வாக நிறுவகம் |

# ஆராய்ச்சி (ஆய்வு) செயற்றிட்டங்கள்

## 1.0 இலங்கையின் இரத்தினக்கல் படிவுகளின் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுச் செயற்திட்டம்

இரத்தினக்கல் படிவுகள் மற்றும் அவற்றின் ஆய்விடங்களை இனங்கண்டு, இயற்கையானதும் சமூகச் சூழலுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் வகையில் தீர்க்கமாக படிம அகழ்வுகளை மேற்கொள்வது சுரங்கக் கைத்தொழில் எதிர்நோக்கும் பாரிய சவாலாகும். இச் சவாலை எதிர்கொள்வதற்காக மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்தால் இலங்கை முழுதும் செயற்படுத்தப்படடுள்ள செயற்திட்டத்தின் மூலம் புதிய இரத்தினக்கல் படிவுகளை இனங்கண்டு தீர்க்கமான பயன்பாட்டிற்காக ஆய்விடங்கள் இனங்காணப்படுகின்றது. இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கான இலங்கையை உள்ளடக்கும் வகையிலான இரத்தினவியல் விஞ்ஞான வரைபடங்களை வரைவதாகும். செயற்திட்டத்திற்கு அவசியமான நிதியையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்காக 2008 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத் தீர்மானம் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இச் செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. மஹிந்த சிந்தனைக் கொள்கையின் படி இலங்கையில் குறைந்த வருமானத்தைப் பெறும் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டத்தின் வெல்லவாய மற்றும் புத்தளை பிரதேச செயலக அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது. படம் 2

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவின் இறுதி அறிக்கையும் இரத்தினக்கல் ஆய்வுவிட வரைபடங்களை வெளியிடப்பட்டுள்ளது. படம் 3.4 – இதுவரையில் முதல் நிலை இரத்தினக்கல் இரண்டாம் நிலை இரத்தினக்கல் சுரங்கங்களின் படிவுகளை உறுதிப்படுத்தும் கள ஆய்வு வெல்லவாய மற்றும் புத்தளை பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. படம் 2




படம் 01: 2011 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்




படம் 02 : 2011 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சிப் பிரதேசம்



படம் 03 : ஆய்வுக் குழு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பம்


DRAFT

Ministry of Environment | පරිසර අමාත්‍යාංශය | சுற்றாடல் அமைச்சு

**Project on Exploration and Assessment of Gem Deposits in Sri Lanka**

**Progress Report**

**(From January, 2010 to October, 2011)**

GJRTI

**Gem and Jewellery Research and Training Institute**
**Hidellana, Rathnapura**
**Sri lanka**

படம் 04 : வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் முதல் பக்கம்




படம் 05 : வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவின் இரத்தினக்கல் படிம வரைபடம்

2.0 இலங்கையின் களுகங்கை மற்றும் வளவே கங்கையை அண்மித்த பகுதிகளில் தங்கப் படிமங்களின் ஆய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயற்திட்டம்

இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்காக களுகங்கையை அண்மித்த பகுதிகளில் படிந்துள்ள தங்கப் படிவுகளைக் கொண்டு இதனை ஒத்த கனிப்பொருட்களின் மண் விஞ்ஞானம், கனியவள விஞ்ஞானம் மற்றும் புவியியல் இரசாயன விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை அவற்றின் மூலம் ஏற்படுத்தல். கனியவள இயந்திரத்தையும் பொருளாதாரப் பெறுமதியை தீர்மானிப்பதுமாகும். : படம் 07

கள ஆய்வின் தெரிவுகளைச் சேகரித்து ஆய்வுகூட ஆய்வு மாதிரிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. படம் 08 மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகத்தின் ஆய்வுகூடத்தில் வசதிகள் இன்மையால் தெரிவுப் பரிசேதனைகளை மேற்கொள்வதற்காக புவியியல் ஆராய்ச்சி மற்றும் அகழ்வுக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.




படம் 06 : செயற்பாட்டுத் திட்டம்






படம் 07 : ஆராய்ச்சிப் பிரதேசம்



படம் 08 : மாதிரிகளைச் சேகரித்தல்

3.0 இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் பங்காளர்களை ஆதாரமாகக் கொண்ட வள நிலையத்தை நடாத்தல்

இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைக்கு உரித்தான தரவுக் களஞ்சியத்தைப் பேணி துறைக்கு உரித்தான புத்தகங்களைக் கொள்வனவு செய்து துறைக்கு உரிய சஞ்சிகைகளைப் பேணலும் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறைப் பிரிவினருக்கு அவசியமான விபரங்களை வழங்குவதுமாகும்.

புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையுடன் தொடர்புடைய உரித்தான தரவுகள் பேணப்படுகின்றன.



பைஸால் றஸீன்
தலைவர்
மாணிக்கக்கல் ஆபரண
ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்

**கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று**

கடந்த 05 வருடங்களிற்கான நிதித் தகவல்

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | | | | | |
| திரைசேரி மானியங்கள் மீண்டெழுபவை | 18,714 | 20,228 | 25,321 | 25,885 | 27,420 |
| ஏனைய பங்களிப்பு | 3,325 | 6,289 | 5,330 | 8,322 | 12,500 |
| பாடநெறிக் கட்டணங்கள் | 5,392 | 5,597 | 2,614 | 2,397 | 3,256 |
| சேவைக் கட்டணங்கள் | 36 | 45 | 22 | 24 | 25 |
| புவியியல் ஆராய்ச்சிச் சேவைகளிலிருந்தான பெறுவனவுகள் | - | - | - | - | - |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **27,467** | **32,159** | **33,286** | **36,628** | **43,201** |
| ஏனைய வருமானம் | | | | | 44 |
| வட்டி வருமானம் | 1,002 | 151 | 69 | 159 | 166 |
| ஏனைய கொள்வனவு | 2,289 | 404 | 194 | 164 | 205 |
| **மொத்த வருமானம்** | **30,758** | **32,714** | **33,750** | **36,952** | **43,616** |
| கழி : செலவுகள் | | | | | |
| (அ) ஆளணி மற்றும் நிர்வாகச் செலவினம் | 27,144 | 29,119 | 26,504 | 28,629 | 30,328 |
| (ஆ) பெறுமானத் தேய்வும் பொதுச் செலவினமும் | 5,516 | 7,570 | 6,402 | 9,102 | 12,905 |
| **மொத்தச் செலவினம்** | **32,660** | **36,689** | **32,906** | **37,732** | **43,233** |
| மிகை / குறை | **-1,902** | **-3,975** | **644** | **-779** | **383** |

**மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்**

2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று

| விபரம் | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| தொழிற்பாட்டு வருமானம் | | | | |
| மீண்டு வரும் மானியங்கள் - திறைசேரி | | 27,419.5 | | 25,885.0 |
| ஏனைய வருமானம் | | 3,255.5 | | 2,397.0 |
| பாடநெறிக் கட்டணங்கள் | | 25 | | 25 |
| கெவூடாக் கற்கள் வெப்பமூட்டற்கட்டணங்கள் | | | | |
| புவியியல் ஆராய்ச்சிச் சேவைகள் | | 166.3 | | 159.1 |
| வட்டி வருமானம் | | 205.4 | | 164.4 |
| நானாவித வருமானம் | | | | |
| மொத்த தொழிற்பாட்டு வருமானம் | | **31,071.7** | | **28,630.50** |
| கழி: தொழிற்பாட்டுச் செலவுகள் | | | | |
| ஆளணி சம்பளங்களும் படிப்பணங்களும் | | 18,924.1 | | 17,972.9 |
| பிரயாணச் செலவுகள் | | 437.5 | | 285.3 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் | | 1,743.6 | | 1,869.6 |
| பராமரிப்புச் செலவுகள் | | 1,642.0 | | 1,155.3 |
| ஒப்பந்த சேவைகள் | | 6,467.8 | | 6,497.5 |
| ஆராய்ச்சி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் | | 696.5 | | 468.8 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | | 393.3 | | 355.6 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் | | **30,304.8** | | **28,605.00** |
| தொழிற்பாடுகளிலிருந்தான மிகை/ (பற்றாக்குறை) | | **766.8** | | **25.4** |
| கழி: நிதிக் கிரயம் | | -22.7 | | -24.1 |
| மூலதனச் செலவினத்திற்கான ஏற்பாடுகள் | 6,458.6 | | 5,646.9 | |
| ஏனைய பெறுவனவுகள் | 6,458.6 | | 5,646.9 | |
| கழி: பெறுமானத்தேய்வு பதிவழிப்புச் செலவுகள் | 6,863.9 | -405.3 | 6,427.2 | -780.3 |
| ஏனைய மூலதன முதலீட்டு மானியங்கள் | **6,040.9** | | **2,675.2** | |
| கழி: மூலதன முதலீட்டுச் செலவினம் | 5,723.4 | | 2,644.2 | |
| மூலதனச் சொத்துக்களின் மேம்பாடுகள் | 317.5 | | 31.0 | |
| ஏனைய மூலதன முதலீடுகளின் தேறிய செலவினம் | | **-428** | | **-804.4** |
| தொழிற்பாடற்ற வருமானம் | | | | |
| கூட்டுக: சொத்து விற்பனையினால் பெற்ற வருமானம் | | 44.2 | | |
| அதிவிசேட விடயங்களுக்கு முன்னரான மிகை/ (பற்றாக்குறை) | | | | |
| அதிவிசேட விடயங்கள் | | 383.1 | | **-779** |
| | | **383.1** | | **-779** |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை// பற்றாக்குறை | | **383.1** | | **-779** |
| கூட்டுக: | | | | |
| முன்னைய ஆண்டிற்கான தேறிய மிகை/ (பற்றாக்குறை) | - 62,815.6 | | - 62,016.7 | |
| கழி: முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் | 200.0 | -63,015.7 | 20 | -62,036.7 |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) முன்கொண்டு செல்லப்பட்டது | | **-62,632.6** | | **-62,815.6** |

**மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| விபரம் | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) |
| சொத்துக்கள் | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | 26,916 | | 32,058 | |
| பணிக் கொடை நிதியம் | 1036 | 27952 | 353 | 32,411.00 |
| பிற்போடப்பட்ட செலவினம் | | | | |
| நவீனமயமாக்கல் மற்றும் பிரித்தல் செலவினம் | | | | 41 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| இருப்பு மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 1375 | | 1393 | |
| கழி: பதிவழித்தலுக்கான ஏற்பாடு | -648 | | -648 | |
| | 727 | | 745 | |
| விற்பனைக்காக உள்ள புத்தகங்கள் | 146 | | 176 | |
| கடன் மற்றும் முற்பணங்கள் | 661 | | 736 | |
| வங்கி வைப்புக் கணக்குகள் (குறுங்கால) | 1755 | | 1619 | |
| வைப்புகள் | 880 | | 890 | |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகள் | 47 | | 4577 | |
| முற்கொடுப்பனவுகள் | 234 | | 52 | |
| காசு மற்றும் வங்கி | 2726 | 7177 | 108 | 8905 |
| மொத்தச் சொத்துக்கள் | | 35,129 | | 41,357 |
| பொறுப்புகள் | | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | | |
| செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் | 230 | | 106 | |
| நிலுவைச் செலவுகள் | 3419 | | 2433 | |
| கடன்கொடுத்தோர் | 119 | | 119 | |
| ஊழைக்கும் போதே செலுத்தும் வரி | 12 | 3781 | | 2658 |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | | | | |
| கட்டுப்பாட்டுக் கணக்கு – தே.இ.ஆ. அதிகாரசபை | 3179 | | 7507 | |
| மானியங்கள் - (ஏனைய நிறுவகங்கள்) | 162 | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 7641 | | 7224 | |
| ஊழியர் பாதுகாப்பு வைப்பு | 10 | 10993 | 10 | 14,741.00 |
| மொத்தப் பொறுப்புகள் | | 14773 | | 17,399.00 |
| தேறிய சொத்துக்களின் கூட்டுத்தொகை | | **20,355** | | **23,958** |
| தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம் | | | | |
| அளிக்கப்பட்ட மூலதனம் | | 50000 | | 50000 |
| ஒதுக்கங்கள் | | 3000 | | 3000 |
| வேறு பங்களிப்புகள் | | 850 | | 850 |
| ஊழியர் செயற்பாட்டு நிதியம் | | 772 | | 750 |
| பிற்போடப்பட்ட வருமானம்/ மூலதன ஏற்பாடுகள் | | 28365 | | 32173 |
| திரண்ட நிதியம் | | -62633 | | -62816 |
| தேறிய சொத்துக்கள் உரிமை மொத்தம் | | **20,355** | | **23,958** |

**மாணிக்கக்கல் ஆபரண ஆராய்ச்சி பயிற்றுவிப்பு நிறுவகம்**

2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | ரூபா.(000) | |
|---|---|---|
| | 2011 | 2010 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை (பற்றாக்குறை) | -428 | -804 |
| காசற்ற செலவினங்கள் | | |
| பெறுமானத் தேய்வு ஏற்பாடு | 6,864 | 9,102 |
| பிற்போடப்பட்ட மூலதன வருமானச் சீராக்கம் | -12,500 | -8,322 |
| கொடுப்பனவுகளின் அதிகரிப்பு | 1,123 | -3,966 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகளின் அதிகரிப்பு | -4,166 | -495 |
| ஊழியர் கிரயத்திற்கான ஏற்பாடுகளின் அதிகரிப்பு | 417 | 385 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு | 3,727 | -487 |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | | |
| மூலதனச் செலவின பதிவழிப்பு | 6,041 | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்(அ) | 1,078 | -4,589 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| இயந்திர உபகரணக் கொள்வனவு | -1,307 | -3,961 |
| இயந்திர் உபகரண விற்பனைகளிலிருந்தான பெறுவனவுகள் | -6,041 | -2,675 |
| முதலீட்டுன் விற்பனையிலிருந்தான பெறுவனவுகள் | 22 | 3,120 |
| இயந்திர உபகரண விற்பனைகளிலிருந்தான கிடைக்கும் இலாபம் | 44 | |
| சொத்து விற்பனை | 129 | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் (ஆ) | -7,152 | -3,516 |
| நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் | | |
| மூலதன மானியம் | 8,692 | 7,294 |
| அரசாங்கத்துக்கான விசேட அறவீடுகள் | | |
| நிதிச் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருநதான தேறிய காசுப்பாய்ச்சல் (இ) | 8,692 | 7,294 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவையின் தேறிய அதிகரிப்பு/குறைவு (அ),(ஆ), (இ) | 2,618 | -811 |
| காலப்பகுதியின் தொடக்கத்தில் காசு/ காசு மீதி | 108 | 920 |
| காலப்பகுதியின் முடிவில் காசு/ காசு மீதி | 2,726 | 108 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
குணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: ரீஎம்/ஜீ/ஜீஜேஆர்ரீஜ/எப்ஏ/2010
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2012 ஆகஸ்ட் 21

தலைவர்,

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகம்

**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்றுவிப்பு நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 32(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2012 மே 14 ஆம் திகதி நிறுவகத்தின் தலைவருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் நடாத்திச் செல்லல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. / சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. / INDEPENDENCE SQUARE, COLOMBO 07, SRI LANKA.

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2691151
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2697451
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ-மெயில் / E-mail: oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களினைத் தயாரித்தலில் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள், குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் மற்றும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய கணக்காய்வு நவடிக்கைகளுக்குத் தேவையான போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெறப்பட்டன என்றும் அதற்கமைய எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டுள்ளது எனவும் நான் நம்புகிறேன். 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

2.1 அபிப்பிராயம்

--------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 18 இன் பிரகாரம் சொத்துக்களைக் கொள்வனவு செய்த திகதியிலிருந்து பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் நிறுவனத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) குத்தகை வாடகை அடிப்படையில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ரூபா 5,600,000 பெறுமதியான கெப் வாகனம் நிலையான சொத்துக்களாகக் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்டுள்ள ரூபா 185,000 தொகையான படிகள் செலுத்த வேண்டிய படியாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) புத்தள கூட்டுறவுச் சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடத்தினை திருத்தம் செய்வதற்கான ரூபா 461,542 தொகையான கொடுப்பனவு தெயட்ட கிருள கண்காட்சி செலவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) புத்தள கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 404,704 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் இப் பணம் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். இது கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை அதிகாரச்சட்டத்தின் 26(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவராக இருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் 2012 ஏப்ரல் வரையும் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டிருக்க வில்லை. பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவது அமைச்சினால் என்பதனால் இந்த நியமனமானது முகாமைத்துவத்தின் கட்டுப்பாடற்ற செயற்பாடு என தலைவர் தெரிவித்திருந்தார். |

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 383,079 மிகையாக இருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 778,960 ஆக இருந்தது. இதற்கிணங்க முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 1,162,039 தொகையான முன்னேற்றம் காணப்பட்டது. மூலதன மானியங்களுக்காக ரூபா 4,177,461 தொகையினைப் பெற்றுக்கொண்டமை முன்னேற்றத்திற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

நிறுவனத்தின் திரண்ட நிதி தொடர்ச்சியாக மறைப் பெறுமதியினைக் காட்டியிருந்ததுடன் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை அதன் மறை மீதிகள் முறையே ரூபா 63,440,426 , ரூபா 62,016,683 , ரூபா 62,815,644 மற்றும் ரூபா 62,632,591 ஆக இருந்தன.

3.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

| | திரவத்தன்மை விகிதம் | ஏற்றுக்கொள்ளப் பட்ட விகிதம் | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| (அ) | நடைமுறை விகிதம் | 2:1 | 1.01 | 0.88 | 0.61 |
| (ஆ) | திரவச் சொத்துக்கள் விகிதம் | 1:1 | 1.70 | 3.06 | 1.21 |

திரவத்தன்மை விகித பகுப்பாய்வின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிசார் நிலைமை பாதகமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்தினக்கல் சுரங்கங்களை வெளிப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் செயற்திட்டம்

1995 யூலை 28 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் கனிப்பொருட்களை ஆய்வு செய்தல் மற்றும் ஆராய்ச்சி செய்தல் நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகக் காட்டப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டிற்காக 2007 இலிருந்து 2010 வரையான 4 ஆண்டுகளுக்கு ஒரு செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ரூபா 36 மில்லியன் நிதி ஏற்பாடு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2007 ஆம் ஆண்டிலிருந்து இச் செயற்திட்டத்திற்காக ஒரு ஆண்டிற்கு ரூபா 9 மில்லியன் படி நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தும் அந்த ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட சதவீதம் 2.06 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ii) செயற்திட்டத்தின் குறிக்கோளானது 4 ஆண்டு காலத்திற்குள் நாட்டிலுள்ள 8 மாகாணங்களில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஆலோசனை வழங்குவதாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை மொனராகலை மாவட்டத்தில் மாத்திரம் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்ட பிரேரணையின் பிரதான குறிக்கோள்களுக்கு மேலதிகமாக நாட்டில் காணப்படுகின்ற சட்டத்திற்கு முரணாக மாணிக்கக்கல் தோண்டுதல் சுற்றாடல் பிரச்சினைகள், புவுச்சரிதவியல் பிரச்சினைகள் என்பன தொடர்பாக தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான தீர்வுகள் இனங்காணப்படவில்லை.

(iv) ஒரு மாகாணத்திற்கு மதிப்பிடப்பட்ட ஆலோசனைச் செலவு உச்ச அளவில் ரூபா 100,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் ஊவா மாகாண சபையின் மொனராகலை மாவட்டத்திற்காக மாத்திரம் ஆலோசனைப் படியாக ரூபா 765,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பயிற்சிப் பாடநெறிகளை நடாத்துதல்

இரண்டு ஆண்டுகளுக்காக கற்கை நெறிகளை நடாத்துவதின் மாணவர்கள் பங்குபற்றல், கற்கை நெறி வருமானம் ஆலோசனையாளர் கட்டண செலவுகள் என்பவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| கற்கைநெறி | பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 2011 | | 2010 | |
| | மதிப்பிடப்பட்ட பெறுமதி | உள்ளபடியான பெறுமதி | மதிப்பிடப்பட்ட பெறுமதி | உள்ளபடியான பெறுமதி |
| ஆபரண வடிவமைப்புக்களை உருவாக்குதல் | 80 | 31 | 49 | 30 |
| ஆபரண உற்பத்தி | 90 | 59 | 165 | 18 |
| ஆபரணங்களுக்கு கல் பதித்தல் | 10 | - | 10 | 07 |
| இரத்தினக்கல் விஞ்ஞானம் | 50 | 36 | 60 | 38 |
| இரத்தினக்கல் வெட்டுதலும் பட்டை தீட்டுதலும் | 70 | 106 | 80 | 55 |
| கெவுடா கற்களை சூடாக்குதல் | 20 | 38 | 20 | 36 |
| இரத்தினக்கல் நிறங்களை தரப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் | 40 | 57 | - | 45 |
| மொத்தம் | 360 | 327 | 375 | 229 |
| கற்கை நெறி வருமானம் (ரூபா) | 6,370,000 | 2,440,000 | 9,030,000 | 2,397,000 |
| ஆலோசனைக் கட்டணம் (ரூபா) | 2,279,000 | 3,576,046 | 2,250,000 | 3,968,717 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின் போது ஆபரண வடிவமைப்புக்களை உருவாக்குதல் (கணணி சார்ந்த) ஆபரணங்களுக்கு கல் பதித்தல் இரத்தினக்கல் விஞ்ஞானம் (ஆங்கிலம்) ஆகிய பாடநெறிகளுக்காக 50 மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்தும் அக்கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது வவுனியா, குளியாபிட்டி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் புதிய பயிற்சி கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்ட போதிலும் பயிற்சி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. யாழ்ப்பாணம், தொழில்நுட்பக் கல்லூாயில் பயிற்சி நிலையம் ஒன்று 2008 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதி வரையும் எதுவித கற்கை நெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 யூலை 28 ஆந் திகதிய 882 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வா்த்தமானியின் மூலம் இந்நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சுரங்கம் தோண்டுதல், ஆபரணங்கள் தயாரித்தல், இரத்தினக்கல் பட்டை தீட்டுதல் என்பவற்றிக்கான முறைமை மற்றும் ஆபரணங்களை வார்த்தல் ஆகிய துறைகளில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக இயந்திரங்கள் ஈடுபடுத்துவதினை உள்ளடக்கி திறன் மற்றும் ஏனைய ஆலோசனைகளை வழங்குதல், செயலமா்வு, கருத்தரங்கு என்பவற்றை நடாத்துதலும் மற்றும் உரிய தலைப்பு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் முதலியன தொடா்பாக துண்டுப்பிரசுரங்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல் இடம்பெற வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் அதன் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஈ) கனடா உலக பல்கலைக்கழக சேவையின் உதவியின் அடிப்படையில் கற்கை நெறிகளை நடாத்துதல் உடன்படிக்கையின் பிரகாரம் விரிவான பகிரங்கப்படுத்தலின் அடிப்படையில் விண்ணப்பங்களைக் கோரி இலக்கிடப்பட்ட 40% குழு ஒன்றினை உள்ளடக்கி கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாது தனிப்பட்ட அறிமுகத்தின் அடிப்படையில் அச்சந்தா்ப்பத்தில் நடாத்தப்பட்ட கற்கை நெறியின் மாணவா்கள் அதற்காக அனுப்பிவைக்கப்பட்டார்கள்

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தின் முன்னாள் சிரேஷ்ட முகாமையாளா் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,495,749 தொகையான தங்க ஆபரண மோசடி காரணமாக ஏற்பட்ட நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு தடவை பணிப்பாளா் சபைக் கூட்டம் கூட்டப்பட்டு நிறுவனத்தின் செயலாற்றல் மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 2011 ஆம் ஆண்டிற்காக 3 பணிப்பாளா் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

4.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2007 ஆம் ஆண்டின் போது ரூபா 12,309,013 கிரயத்தினை மேற்கொண்டு மண் தோண்டும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரை இந்த இயந்திரம் உரிய பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதுகாப்புச் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக இரத்தினபுரி அலுவலகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வருகைப் பதிவேட்டின் பிரகாரம் 2 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சேவையாற்றிய போதிலும் 3 உத்தியோகத்தர்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேவையினை வழங்காத நபருக்காக 2008 யூலை 15 ஆந் திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 559,911 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு, காலி, கண்டி, புத்தள நிலையங்களில் முறையே 54, 03, 23 மற்றும் 45 மாணவர்கள் காணப்பட்டதுடன் இந் நிலையங்களின் மேற்பார்வைக்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் முறையே 59, 12, 20 மற்றும் 37 தடவைகளாக எட்டு மாதங்களுக்குள் வருகை தந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) கொழும்பு நிலையத்தினைப் பேணுதல்

ரூபா 263,409 பெறுமதியான 503.87 மொத்த சதுர அடி அளவுள்ள 3 அறைகள் எதுவித செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் ஏனைய நிலையங்களிலிருந்து எடுத்து வந்த இயந்திரங்களும் உபகரணங்களும் பயன்படுத்தப்படாது இடத்துக்கிடம் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

4.5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரித்த பதவியினரும் உள்ளபடியான பதவியணியினரும் முறையே 133 மற்றும் 44 ஆக இருந்தன.

(ஆ) பிழையான சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு சம்பளம் செலுத்துவதன் காரணமாக ரூபா 938,950 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சம்பள மாற்றத்தினை அமுல்படுத்தும் போது தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4.3, 4.4, 4.5 ஆகிய உபபிரிவுகளுக்கு இணங்கி இருக்கவேண்டிய போதிலும் அதற்கு முரணாக அனைத்து பதவியணியினர்களதும் சம்பளங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 2009 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் உத்தியோகத்தர்களது சம்பளத்தினை அதிகரிப்பது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவினதும் சிபார்சுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.6 <u>வாகனப் பயன்பாடு</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்திடம் 6 வாகனங்கள் காணப்பட்டதுடன் 2 வாகனங்கள் உத்தியோகபூர்வ வாகனங்களாக ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளை 4 வாகனங்கள் குளாம் வாகனங்களாகக் காணப்பட்டன. மேற்கூறிய வாகனத் தொடரில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 3 வாகனங்கள் காணப்பட்டதுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 837,925 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் தலைவரினால் 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 550,000 தொகையும் 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 252,000 தொகையும் அங்கீகாரமின்றி எரிபொருள் படிகளாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

5. <u>கணக்களிதன்மையும் சிறந்த கட்டுப்பாடும்</u>

5.1 கூட்டிணைந்த திட்டம்

2010 - 2014 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்திலுள்ள இலக்குகள் உரிய கால எல்லைக்குள் அடைந்துகொள்ளப்படாதிருந்ததுடன் திருத்தம் செய்யப்படாது அந்த இலக்குகளினதும் தந்திரோபாயங்களினதும் காலஎல்லை மாத்திரம் மாற்றப்பட்டு 2011 - 2015 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தன.

5.2 <u>செயல்நடவடிக்கைத் திட்டம்</u>

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் எவை என்பதுவும் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்கிடப்பட்ட தரவுகள் எவை என்பதுவும் தொடர்பாக குறிப்பிடப்படாதிருந்ததுடன் ஆண்டிற்கான செயல் முன்னேற்றத்தினைச் சமர்ப்பிக்கும் போது சதவீதப் பெறுமதி மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) கெவுடா கற்களை சூடாக்குவது தொடர்பாக மொனராகலை மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான கெவுடா கற்களின் இராசயன சேர்மானத்தினை பகுப்பாய்வு செய்தல், சூடாக்கும் மட்டத்தினை அடையாளம் காணல் என்பவற்றினை மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் அவை இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) <u>களுகங்கைப் பிரதேசத்தில் தங்கம் காணப்படுவது தொடர்பாக பரிசோதனை செய்தல்</u>

இங்கே 1000 சதுர கிலோமீற்றரினைப் பரிசோதிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சுரங்கங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 18 மாதிரிகள் நிறுவனத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லாததன் காரணமாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

5.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவு செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்காக அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

5.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 4 கூட்டங்களை நடாத்தியிருந்தன.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கும் செலவுகளுக்குமிடையே 25% இலிருந்து 251% வரையான குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.6 ஆண்டறிக்கை

2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2012 ஏப்ரல் மாதம் வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

5.7 இருப்பு மெய்மையாய்வு

ஹம்பாந்தோட்டை ஆபரண உற்பத்திப் பயிற்சி நிலையத்தில் 72 பயிற்சி உபகரணங்கள் பற்றாக்குறையாகக் காணப்பட்டதுடன் கொழும்பு அலுவலகத்தில் ரூபா 926,380 பெறுமதியான பயன்படுத்தப்படாத 33 பொருட்கள் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுமதி குறிப்பிடப்படாத 11 பொருட்களும் ஏடுகளுக்கு கொண்வரப்பட்டிருக்கவில்லை. புத்தள செயற்திட்ட அலுவலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவிலுள்ள பெறுமதி குறிப்பிடப்படாத 7 பொருட்களும் ஏடுகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(ஆ) சம்பளங்கள்
(இ) கற்கை நெறிகளை நடாத்துதல்
(ஈ) பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்
(உ) பொருள் மெய்மையாய்வு

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# GJRTI














